31st January 1972]

THE HON. THIRU S. MADHAVAN : That is why this Government, after taking over charge, have asked the Collector, and the Director of Industries to call for entrepreneurs and to encourage the people to come forward for these developed plots.

THIRU G. SWAMINATHAN : May I know whether the Government would prescribe a time-limit of 6 months or one year so that if no entrepreneurs come forward within this period, they can sell out plots?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, it is not possible to fix any time-limit.

Tree-top Hotels at Mudumalai

* 72 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to lease out lands in Mudumalai Sanctuary to private parties to run "tree-top" Hotels; and

(*b*) if so, the details thereof?

"மர உச்சி" ஓட்டல்கள், முதுமலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "மர உச்சி" ஓட்டல்கள் நடத்துவதற்கு, முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் தனியாருக்கு நிலங்கள் குத்தகை விடுவதற்கு செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) "மர உச்சி" ஓட்டல்கள் கட்டுதல் என்னும் பொருள் பற்றி 24-5-1967 அன்று ஊட்டியில் நடைபெற்ற தமிழ் நாடு வன விலங்கு வாரியத்தின் பதினொன்றாவது கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தமிழ் நாடு வன ஆலோசனை வாரியத்தின் அலுவலர் அல்லாத உறுப்பினர்களில் ஒருவரான திரு. எம். ஏ. பார்த்தசாரதி என்பவர், முதுமலை வன விலங்கு உய்விடத்தில் இத்தகைய ஓட்டல் ஒன்று கட்டுவதற்கு முன்வந்ததுடன், அரசுக்கு அத்திட்டத்தின் நகலையும் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார். அவருக்கு, முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் இத்தகைய ஓட்டல் ஒன்று கட்டுவதற்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 100 விதம் 100 ஹெக்டேர் நிலத்தை முதலில் 25 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கலாம் என்ற வனத்துறைத் தலைவரின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சென்ற ஜூன் மாதத்தில் முதுமலை வனவிலங்கு உய்விடத்திற்குச் சென்று பார்த்தபோது அங்கே மற்றொரு "வ்யூ டவர்", உயரே இருந்து பார்க்கிற கோபுரம் ஒன்று கட்டப்போவதாகச் சொன்னார்கள். அதுமாதிரி இன்னொரு கோபுரம் கட்டும் யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தலைவர் அவர்களே, இருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : May I know whether it is the intention to build these hotels on the tops of trees or whether there is any other significance for this phrase?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : மலை உச்சியில் அல்ல. தரைமட்டத்தில் உயரமான இடத்திலிருந்து எல்லா இடங்களையும் பார்க்குமளவில் அந்த ஓட்டல் கட்டப்படும்.

Master Plan for Mudumalai Sanctuary

* 73 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up any panel to prepare a Master Plan for Mudumalai Sanctuary; and

(*b*) if so, the details thereof?

முதுமலை வனவிலங்கு உய்விடத்தை மேம்படுத்தும் திட்டம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முதுமலை வன விலங்கு உய்விடத்தை மேம்படுத்துவதற்குத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்காக குழு ஏதாவது அமைக்கும் பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) & (இ) தமிழ் நாடு வன விலங்கு வாரியம், சென்னையில் 25-9-1969-ல் நடந்த கூட்டத்தில், முதுமலை வன விலங்கு உய்விடத்தை மேம்படுத்துவதற்கு விரிவான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் ஆலோசனை நல்கும் பொருட்டு ஒரு குழு அமைக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்தக் குழு அமைக்கப்பட்டதா? ஏதாவது அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : அந்தக் குழுவில் 9 உறுப்பினர்கள் உண்டு. அக்குழுவினுடைய அறிக்கையை அடுத்த மாதம் தர இருக்கிறார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, in Mudumalai Game Sanctuary although we are very anxious to see the wild animals, only animals like bison and occasionally rabbits that run across the sanctuary are found. May I know whether the Government will take steps to bring more wild animals while preparing the Master Plan to start the Mudumalai Sanctuary for wild animals? It is for that purpose we come there, Sir.

MR. CHAIRMAN : I think they also migrated from **Kerala**.